மலர் 2 இதழ் 2 அக்டோபர் 2017 ISSN – 2454-3993

# பாரதியின் சுதேசியச் செயல்பாடுகள் – ஒரு பார்வை

முனைவர் பா. சிவானந்தவல்லி

ஏறத்தாழ இருநுற்றாண்டுகால வரலாற்றையுடைய இந்திய தேசிய விடுதலை இயக்கம் பல்வேறு காலகட்டங்களில் விழைந்த கருத்தாக்கங்களை உள்வாங்கி இயங்கியது. இந்திய தேசிய காங்கிரஸ், தேசியத்தலைவர்களின் ஆளுமை மற்றும் செயல்பாடுகள், தீவிரவாத மிதவாத இயக்கங்கள் சமூகத்தின் சாதாரண மக்களிடையே உள்ளும் புறமும் நிலவிய ஆங்கிலேய ஆதிக்க கட்சியின் மீதான எதிர்ப்புணர்வு முதலியன தேசிய இயக்கத்தை பல்வேறு தளங்களில் செயல்பட வைத்தன. ஆங்கிலேய எதிர்ப்புச் சூழலில் தேசியத்தலைவர்கள் தேசிய நெருப்பை வளர்க்கும் விதமாக சுதேசியம், பஹிஷ்காரம், வரிகொடாமை போன்ற சில கருத்தாக்கங்களை உருவாக்கி அவை விடுதலை பெற உதவும் என்று எண்ணி அவற்றின் கட்டாயத்தை மக்களிடையே கற்பித்தனர். இந்நிலையில் தேசிய இயக்கத்தின் தீவிரமான காலகட்டத்தின் மையப்பகுதியில் பாலங்காதர திலகர், மகாகோவிந்த ரானடே, ஸ்ரீஅரவிந்தர், விபின் சந்திரபால், லாலா லஜபதிராய் முதலிய வடஇந்தியத் தலைவர்களும் சுப்பிரமணிய சிவா, வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய பாரதியார், வ.உ.சி ஜி.சுப்பிரமணிய ஐயர் முதலிய தென்னிந்திய தலைவர்களும் சுதேசி இயக்க கருத்துக்களை மக்களிடையே எடுத்துரைத்தனர்.

அந்நியப்பொருள் புறக்கணிப்பு அல்லது அவற்றிற்கு தடை ஏற்படுத்துவதன் மூலம் ஆங்கிலேய பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்து தாய் நாட்டுப் பொருளாதாரத்தை பலமடையச் செய்வதும் முக்கியமானதாக கருதப்பட்டது. இக்கருத்தாக்கம் சமூகத்தின் பெரும்பாலான தரப்பினரிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுது. குறிப்பாக துடிப்பான இளைஞர்கள் இவ்வியக்கத்தில் முனைப்புடன் செயல்பட்டனர். சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் இந்திய விடுதலைப் பயணத்தின் வேகத்தை கூட்டியது. இதில் தமிழ்நாட்டில் மிகவும் துடிப்புடன் செயல்பட்டவர் சி.சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு மாபெரும் தேசியக் கவிஞர். இவர் பாமர மக்களும், குறைவான கல்வி பெற்றவர்களும் இலக்கியத்தைச் சுவைக்க முடியும் என்ற கொள்கைக்கு வழியமைத்துத் தந்தவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குப்பெற்ற ஆளுமைகளில் பாரதியாரின் இடம் தனித்துவமானது. எல்லாவிதமான விமர்சனங்களையும் எதிர்கொள்ளும் வகையில் பாரதியின் எழுத்துக்கள் இன்று முன்னிலைப் படுத்தப்படுகின்றன. பாரதி தன்னுடைய சமகாலப்பிரச்சினைகளில் பங்கேற்றதுடன், எதிர்காலம் குறித்தும் அக்கறை கொண்டிருந்ததனால், அவருடைய பார்வையில் பன்முக அம்சங்கள் பொதிந்துள்ளன.

பாரதியினுடைய தேசியச்சிந்தனைகள் பல காரணிகளால் கட்டமைக்கப்பட்டன. அவர் தம் சமகால, சமூக, அரசியல் வரலாற்றுப் பின்னணியில்தான் அவை உருவாயின. பல கூறுகளை உள்ளடக்கிய அவருடைய பன்முக ஆளுமையின் பின்புல உந்து சக்தியாக அவருடைய தேசிய சிந்தனைகளே அமைந்தன.

“பாரதியின் தேசபக்தி கடன் வாங்கிய சரக்கல்ல அது அவருடைய சொந்த சொத்து“ என்று பாரதியின் நண்பர் துரைசாமி குறிப்பிடுகின்றார்[1]. பாரதியின் சொந்த வாழ்க்கையே தேசபக்தியை உண்டாக்கியது எனலாம். பாரதிக்கு தேசியம் பற்றிய சிந்தனை ஏற்பட அவரின் குடும்பநிலையும் அவர் பத்திரிகையாளராக இருந்ததும், புத்தக வாசிப்பாளராக இருந்ததுமே காரணமாகும். தவிர பாரதியின் தேசியச் சிந்தனையானது குடும்பச் சூழலாலும், உலக விடுதலை இயக்கங்களாலும்,

காசி வாசத்தினாலும், சகோதரி நிவேதிதாவாலும், ஜி. சுப்பிரமணிய ஐயராலும், அவர் பங்கேற்ற தேசிய அமைப்புக்களாலும் வலுப்பெற்றது. இந்திய நாடு முழுவதுமே பிரிட்டிஷ் ஆட்சியாளரின் சுரண்டல் நடந்தது. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலும் ஆங்கிலேய ஆட்சிக்கு கணிசமான எதிர்ப்பை உருவாக்கக்கூடிய வாய்ப்பு முற்றிலுமாக இல்லை. விதிவிலக்காக ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வு பற்றி அறிவித்த ஒரே மாவட்டம் பாரதி பிறந்த திருநெல்வேலி மாவட்டம் மட்டுமே.[2]

''நேஷனலிஸம்'' என்ற சொல்லை பாரதியார், ''ஜாதீயஅறிவு'' என்று தமிழாக்கம் செய்துள்ளார். 19.3.1907-ஆம் தேதி ''இந்தியா''பத்திரிகையில் ''இந்தியாவிலே பிறந்து'', இந்தியாவிலே வளர்ந்து இந்நாட்டின் ஷேம லாபங்களையே தமது ஷேம லாபங்களாகவுடைய எல்லா வகுப்பினரும் ஒரே ஜாதியென்ற, அந்த ஜாதி முழுமையும் உன்னதம் பெறுவதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டுமென்ற ஞானமே ''ஜாதீயஞானம்'' எனப்படும்[3] என்று கூறுகின்றார். தேசபக்தி என்பது நம்மவர்க்கு அந்நியர்களால் நேரும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமே செய்து கொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்புடையது என பாரதி தேசபக்திக்கு இலக்கணம் கூறுகின்றார்[4]. அவ்வநீதியை நீக்க சுதேசியச் செயல்பாடுகள் ஓர் ஆயுதம் எனக்கருதினார்.

வங்காளப் பிரிவினையின் காரணமாக தேசிய உணர்ச்சி இந்தியா முழுவதும் பரவியது. இதில் தான் பாரதியின் தேசியமும் தோன்றியது. 1905 ஆம் வருடம் காசியில் கூடிய 21 ஆவது காங்கிரஸ் மாநாட்டில் தான் முதன்முதலில் அன்னிய நாட்டுச்சரக்கு பஹிஷ்காரத்தைப் (விலக்குதல்) பற்றிய பேச்சு சுதேசியச் செயல்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தும் வலுப்பட்டது. இம்மாநாட்டில் பங்கு பெற்று திரும்பும் வழியில்தான் பாரதி. விவேகானந்தரின் பெண்சீடர் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்தார். அவர் பாரதத்தாயின் முழுப் பரிமாணத்தையும் காண்பித்து அதன் மூலம் பாரதியை உத்வேகப்படுத்தினார்.

ஜி.சுப்பிரமணிய ஐயரால் தூண்டப்பட்ட பாரதியின் தேசபக்திச் சிந்தனை சகோதரி நிவேதிதாவால் விரிவடைய ஆரம்பித்தது. இதன் பின்னர் தான் பாரதி தீவிர தேசியவாதத்தை வலியுறுத்தும் படைப்புகளைப் படைத்தார். அவ்விதமான செயல்களையும் தமிழகத்தில் தலைமையேற்று நடத்தினார். அதில் ஒரு பகுதி தான் சுதேசியச் செயல்பாடுகளான சுதேசிவஸ்து பிரசாரிணி சபா, சென்னை ஜனசங்கம் ஆகியவற்றில் பங்கேற்றதும் சுதேசியத் தொழில் முயற்சி, சுதேசிய நிதி திரட்டல் ஆகியவற்றிற்கு பாடுபட்டதும் ஆகும். தேசியம் என்பது அடிப்படையில் தன்னிறைவு (Self- Sufficiency), ஒற்றுமை (Unity), சார்புடைமை (Identity) ஆகிய மூன்று சிறப்பம்சங்களை உடையது. அந்நியர்களின் ஆளுகைக்கு இந்தியா உட்பட நேர்ந்ததால், இச்சிறப்பம்சங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. தேசிய மனப்பான்மை உடையவர்கள் என்ன செய்வதென்று தீவிரமாக சிந்திக்கவும், செயல்படவும் ஆரம்பித்தனர். இதன் விளைவாக, தன்னிறைவின் (தேசியத்தின்) ஒரு கூறாக சுதேசி இயக்கக் கொள்கைகள் வேறூன்றலாகின. பாரதியார் ஒவ்வொரு நாகரிகத்திற்கும் ஒவ்வொரு தன்மையுள்ளது என்றும், நாம் சித்தலட்சியத்திற்காக நமது சுகங்களை விட்டுவிட்டால் சுதேசியம் உறுதிப்படும் என்கின்றார்[5].

தேசிய இயக்க செய்திகளை சுதேசியம் என்றாலென்ன என்ற கேள்வியைக் கேட்டு அதற்குரிய பதிலை எல்லாருக்கும் விளங்கும் வகையில் பாரதியார் விளக்குகிறார். ''தனது தாய் நாட்டின்கண் உண்டாகும் பேரன்பே சுதேசியம். அது ஒரு மனிதன் பிறக்கும் போதே உடன் தோன்றி விடுகிறது'' என கூறுகின்றார். பாரதியார் சுதேசியக் கருத்துக்களை மக்களிடையே வலியுறுத்த பல உத்திகளைக் கையாண்டார். ஆங்கிலேயர் ஆதரவு செயலில் ஈடுபடுபவர்களை கண்டித்தல், சுதேசிய நிதி முயற்சி, தொழில் முயற்சியை ஆதரித்தல், பாராட்டுதல், ஊக்குவித்தல் என பல

தளங்களில் செயல்பட்டார். தானும் அம்முயற்சிகளில் பங்கேற்றார் பாரதியார் சுதேசியத்தை விடுதலை பெறுவதற்கான ஓர் வழியாக எண்ணினார். அன்னியருக்கு அடிமையாக இருந்தால் மனிதனும் நாடும் முன்னேற முடியாது என்பதை நம் மக்கள் இப்போது தான் உணர ஆரம்பித்து உள்ளனர். எனவே நாமே முயன்று கூடிய மட்டும் அன்னியரான ஆங்கிலேயர் உதவியைத்தள்ளி நமது தேசம் நற்கதியடைய பாடுபட வேண்டுமென்பது தான் இந்த நவீன ஆவேசத்தின் ஆக்ஞை எனக் கூறி சுதேசியத்தின் அவசியத்தைக் குறிப்பிடுகிறார்

**சுதேசி வஸ்து பிரசாரிணி சபை**

சென்னையில் பாரதியார் தன் நண்பர்களின் உதவியுடன் இந்த அமைப்பைத் தொடங்கினார். இதன் தலைவர் பாரதியின் நண்பர் சட்டக்கல்லூரி மாணவர் சக்கரைச் செட்டியார். இதன் தோற்றம் பற்றி 6.4.1907 ஆம் தேதி 'இந்தியா' சில காலத்திற்கு முன்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.'புதிய கட்சி'யின் சுதேசி இயக்கப் பிரச்சாரத்திற்காக இயங்கிய இந்த தேசிய அமைப்பு பற்றிய விவரம் அறியப்பட வேண்டியதாகும். 1908-ஆம் ஆண்டு பாரதியார் புதுச்சேரியில் புகலிடம் தேடிக்கொண்டதால் இந்தச்சபையும் முடங்கிப்போனது.[6]

**சுதேசியத் தொழில்**

பாரதியார், நம்நாடு சுதந்திரமடைய வேண்டுமானால் தொழில்வளம் பெருக வேண்டும் தொழில் வளம் பெருக வேண்டுமானால் சுதந்திரமடைய வேண்டும் எனவே நாம் இரண்டையும் சமமாக செய்ய வேண்டும். நாம் ஏழைகளாயிருப்பதால் பெரிய அளவில் தொழிலில் இறங்க முடியாவிட்டாலும் சிறு அளவில் ஆரம்பித்து அதனை பெருகச் செய்யலாம் என்றும், நாம் அவ்வாறு செய்யத் தொடங்கினால் அது எஃகுப்போல கூரியதாகி நம் சுதந்திர முயற்சியை எளிதாக்கும் என கூறுவதன் மூலம் மக்களை அதைரியப்படாமல் சுதேசி செயலில் இறங்க அழைப்பு விடுக்கின்றார். நாம் நம் உறக்கத்திலிருந்து விழித்து[7] சுதேசியத்தைப் பின்பற்றி ஒற்றுமையுடன் இந்தியாவை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டால் இதற்கு கடவுள் துணையிருப்பார் எனவும் கூறுகின்றார்[8].

இந்தியர்கள் அனைத்து தொழில்களிலும் சிறக்க வேண்டுமென எண்ணுவது பாரதியின் இயல்பாகும். பாரதி, இந்தியர்கள் கைத்தொழில், நெசவுத்தொழில் ஆகியவற்றில் மீண்டும் கவனம் செலுத்தி இழந்த பெருமைகளை மீட்டெடுக்க வேண்டும். நம் பணத்தை நம்மவர்கள் செய்யும் தொழில்களில் முதலீடு செய்ய வேண்டும். மேல்நாட்டுத் தொழில்களை நம்மவர்கள் கல்வி கற்று அறிந்துகொள்ள வேண்டும் எனவும் கூறுகின்றார். அவ்வகையில் ஜப்பானுக்குத் தொழிற்கல்வி கற்கச் சென்ற இளைஞனைப் பாராட்டுகிறார்.

பாரதியார் இந்தியர்கள் சுயதொழில் தொழிற்சாலைகளை (லக்ஷ்மி காகித தொழிற்சாலை, தஞ்சாவூர் மாவட்ட பின்னத்தூர் தொழிற்சாலை, லக்தா மெழுகுவர்த்தி தொழிற்சாலை) ஆரம்பித்து நடத்தி வருவதைக் கண்டு இது சுதந்திரம் அடையும் வழி என குறிப்பிட்டு இதனை மக்கள் பின்பற்றுவது கண்டு, மகிழ்ச்சி தெரிவிக்கிறார். 1906 ஆம் ஆண்டு கல்கத்தா கைத்தொழில் சங்கத்தில் பரோடா மகாராஜா பேசும்போது நம் நாடு முற்காலத்தில் கைத்தொழிலில் சிறந்திருந்ததையும் தற்போது அவற்றைக் கைவிட்டதால் கைக்கோளர், கம்மாளர், குயவர் ஆகியோர் இழிநிலையில் இருப்பதையும் சுட்டிக்காட்டுவதை குறிப்பிட்டு அவர்கள் நிலையை உயர்த்த அரசாங்கம் உதவி புரிய வேண்டுமென்றும் கூறுகின்றார். சுதேசியத்தை வளர்ப்பது நமது நாட்டுச் செல்வம் வளருவதற்கு ஓர் கருவி. அதை யாவரும் கைவிடாமல் நமது ஏழை ஜனங்களின் தொழிலையே பாதுகாத்து வருவது நமது சிக்கனத்துக்கு ஆதாரம் என்கிறார்.[9]

1904ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தியாவில் சுதேசியத்துணி வியாபாரம் அதிகரித்திருப்பதும் லண்டனில் துணி வியாபாரம் படுத்துவிட்டதையும் குறிப்பிட்டு அது, இந்தியாவில் சுதேசியம் வெற்றியடைந்து விட்டதைக் காட்டுகின்றது என்கிறார். இதனால் இங்கிலாந்தில் துணித்தொழிற்சாலையில் வாரத்திற்கு மூன்றுநாட்கள் விடுமுறை அளிப்பதாகக் கூறுகிறார் ஆங்கிலேயர்கள் நியூயார்க்கில் இதைப்பற்றி பேசியதைக் கூறுவதன் மூலம் சுதேச எண்ணத்தை வலுப்படுத்தவும், தீவிர தேசிய வாதத்தின் வெற்றியை மிதவாதிகளுக்கு பறைசாற்றவும் செய்கிறார்[10].

வடஇந்தியாவில் மக்கள் செல்வாக்குடையோரே தலைவர்களாக இருப்பதால் தான் பஹிஷ்காரம் வெற்றியடைந்திருக்கின்றது. சென்னையில் இந்நிலை இல்லாமையே சுதேசியம் இங்கு வெற்றியடையாததன் காரணம் எனச் சொல்கின்றார்.[11] இந்தியாவில் முதிர்ந்த பழம்பெரும் தேசியவாதியான நௌரோஜி விண்ணப்பம் செய்து சுதந்திரம் பெறுதல் என்ற கோட்பாட்டிலிருந்து மாறி நமக்கு நாமே முயற்சிசெய்து சுயராஜ்யம் பெற வேண்டுமென பேசியிருப்பது சுதேசி முயற்சி வெற்றியடைய நாம் மக்களை ஒன்றிணைப்பதற்கு ஓர் வழிகாட்டி என கூறுகின்றார்.[12]

**சுதேசிக்கப்பல் கம்பெனி**

1908ஆம் ஆண்டு தூத்துக்குடியில் சுதேசி இயக்கம் சூடுபிடித்தது. தூத்துக்குடியில் கப்பல் கம்பெனி ஆரம்பிப்பதற்கு முன் நம் சரக்குகள் அந்நியர் கப்பலில் ஏற்றப்பட்டு வந்தது. ஆங்கிலேயரின் போதனையால் இவர்களும் சரக்குகளை ஏற்ற மறுத்தனர். பாரதியார் இதனைச் சுட்டிக்காட்டி நம் கப்பல் முயற்சி ஜெயமடைய வேண்டுமென்றும் கூறுகிறார். எனவே சுதேசிக்கப்பல் முயற்சியை முதன்மைத் தொழில்முயற்சியாக எண்ணுகிறார். அம்முயற்சி தடைப்பட்டு விட்டால் அது நாட்டிற்கே இழுக்கு என்பதால் மக்கள் பணமளித்து அதனைச் சிறப்பாக நடத்த வேண்மெனவும் கூறுகிறார். சொல்லியது மட்டுமின்றி தானும் ரூ. 5 கொடுத்து முன்மாதிரியாகவும் விளங்குகிறார். சுதேசிகப்பலுக்காக காசியில் பணம் சேர்க்கும் தேசாபி மானியைப் பாராட்டுகிறார்.[13] சுதேசிகப்பல் முயற்சிக்கு ஏழைகளும் பணம் தரவேண்டுமென்பதை பாரத மாதாவின் கட்டளையாகக் கூறுகின்றார். அவ்வாறு உதவிய சர்க்கஸ்காரர்[15] நாடகக்கலைஞர்கள், ராமய்யர், பொமான்ஜி, கிருஷ்ணவர்மா போன்றோரை பாராட்டியுள்ளார். பணமுடையவர்கள் தரமாட்டார்கள் எனவும், ஏழைகளின் முயற்சியில் உருவான திட்டம் அவர்களாலேயே நடத்தப்பட வேண்டும் எனக் கூறுவதன் மூலம் தன்னை ஒரு தேசியவாதியாக அடையாளப்படுத்திக் கொள்கின்றார்[16]. சி.வ.கம்பெனியார் டாஜ்பாய் கம்பெனிமீது வழக்குதொடர் தீர்மானித்து உள்ளதையும் கூறுகிறார்[17]. ஆங்கிலேயருக்கெதிராக கப்பல் விடுவது மட்டுமின்றி இந்தியர்கள், இலங்கையர்கள் மற்றும் ஆசியக் கண்டத்தவர் அனைவருக்கும் கப்பல் நடத்தும் தொழிலைப் பழக்குவித்து, அதன் மூலம் வரும் லாபத்தை அவர்களே அனுபவிக்கச் செய்வது கம்பெனியின் நோக்கங்களில் ஒன்றாகும்[18].

சுதேசிக்கப்பல் கம்பெனி 16.10.1906 ஆம்தேதி முறையாகப் பதிவு செய்யப்பட்டது. வ.உ.சி.யின் சுதேசிக்கப்பல் முயற்சிக்கு முன்னோடிகள் உள்ளனர்[19]. இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக வ.உ.சி.யின் முயற்சி இருந்தது. வ.உ.சி.யின் முயற்சியால் 1907ஆம் ஆண்டு மே மாதம் எஸ்.எஸ் காலியோ, எஸ்.எஸ் லாவோ என்ற இருகப்பல்களும் தூத்துக்குடி வந்தன. வ.உ.சி கப்பல் வாங்குவதற்கு பம்பாய் சென்றபோது பாரதி இதனை ஆதரித்து 'இந்தியா' பத்திரிகையில் எழுதினார்[20]. ஆங்கிலேயர் இந்த முயற்சியை ஒடுக்க எண்ணினர்[21].

தூத்துக்குடி - கொழும்புக்கு இடையிலான சுதேசிக்கப்பல் போக்குவரத்து வெற்றிநடை போட்டது. இதனால் ஆங்கிலேயர்கள் தங்கள் கப்பல் பயணக்கட்டணத்தைப் பாதியாகக்

குறைத்தனர். படிப்படியாக கட்டணம் இல்லாமலேயே ஏற்றிச்செல்வதாக அறிவித்தனர். ஏனெனில் வ.உ.சி.க்கு பங்குதாரர்கள் ஒரு புறமும் ஆட்சியாளர்கள் இன்னொரு புறமும் நெருக்கடி தந்தனர். ஆனாலும் வ.உ.சி.யின் தளராத முயற்சியால் சுதேசிக்கப்பல் வணிகம் சுருண்டு படுக்காமல் காப்பாற்றப்பட்டது. ஆயினும் கப்பல் நிர்வாகிகள், கப்பல் கம்பெனிக்கு எதிராக பிரிட்டிஷ் ஆட்சியினர் கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறையைக் கண்டு அஞ்சினர். இதனால் வ.உ.சி.கப்பல் கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விடுபட்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டார். இதனால் சுதேசிக்கப்பல் கம்பெனி நலிவடைய ஆரம்பித்தது.

இதன் பின்னர் சுதேசி கப்பல் இரண்டும், ஆங்கிலேயரிடமே விற்கப்பட்டன. இதனை எதிர்த்து பாரதியார், ‘‘சிதம்பரம் மானம் பெரிது, ஒரு சில ஓட்டைக்காசுக்களுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்று விட்டார்களே, பாவிகள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி, வங்காள விரிகுடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும் என்றும் பேடிகள் என்றும் ஆவேசத்தோடு எழுதினார்.

வ.உ.சி சுதேசிக்கப்பல் ஓட்டியதாக குற்றம் சாட்டப்பட்டு அப்பிரச்சினை பற்றி விவாதிக்க வ.உ.சி க்கு திருநெல்வேலி கலெக்டர் விஞ்ச் அழைப்பு விடுத்தார். கப்பல் ஓட்டியதற்காக வ.உ.சி சிறைக்கு அனுப்பப்பட்டார். இந்த விவாதத்தை கருத்தில்கொண்டு பாரதி ஒரு பாடல் எழுதி இந்தியாவில் வெளியிட்டார்[22]. கப்பல் கம்பெனி நஷ்டப்பட்டாலும் அதனால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட நஷ்ட பணம் இந்தியாவிலேயே இருந்தது என 1919 ஆம் ஆண்டு சுதேசமித்திரனில் வ.உ.சி. தெரிவித்துள்ளார்[23].

ஆங்கிலேயரால் நசிந்திருக்கும் கைத்தொழில்களை வலுப்படுத்த ஆலய பொக்கிஷம் மற்றும் மடங்களிலும் புதைத்து வைத்துள்ள செல்வத்தைக் கொண்டு 'கைத்தொழில் பேங்க்' ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தை மடாதிபதிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனக்கூறுவதன் மூலம் கைத்தொழில் கடவுளைவிட மேலானது என எண்ணுவதை அறியலாம்.[24] இந்தியர்கள் எந்தெந்த தொழிற்சாலைகளை எங்கேங்கே அமைக்க வேண்டுமென்பதைப் பட்டியலிட்டுள்ளார். அத்துடன் இந்தியர்கள் என்னென்ன தொழில்களைச் செய்ய வேண்டுமென்பதையும் கூறியுள்ளார். ‘செல்வத்துட் பிறந்தனமா’ என்ற கவிதையில்

செல்வத்துட் பிறந்தனமா? அது பெறுவா(ன்) சிறுதொழில்கள் பயிலவல் லேமோ? என்றும் ‘தொழில்’ என்ற பாடலில் இந்தியர்கள் இரும்புத்தொழில், எந்திரத்தொழில், முத்தெடுத்தல், மட்பாண்டம் செய்தல், காய், கனி விளைவித்தல், விவசாயம் நெசவுத்தொழில், அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் சிறக்க வேண்டுமென்கின்றார்.[25]

**சுதேசிய நிதி**

சுதேசிய நிதி என்பது ஜி. சுப்ரமணிய ஐயர் போன்ற தேசியத்தலைவர்களால் நாட்டின் முன்னேற்ற முயற்சிகளுக்கு செலவிடுவதற்காக பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்டது. இது பஹிஷ்கார இயக்கத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டது. இந்நிதியானது, தீபாவளி, மகாமகம் போன்ற பண்டிகை நாட்களில் அதிகம் திரட்ட முடிவு செய்யப்பட்டது. பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோரிடம் அந்நாள்களில் முனைப்புடன் நிதி திரட்ட வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கிறார்.[26] சுதேசியநிதிக்கு பணம் அளித்தவர்களையும், அதற்காக ஒத்துழைத்த மாணவர்களையும், அதனைத்திரட்ட ஜி.சுப்பிரமணிய ஐயர் போன்றோர் செய்த முயற்சிகளையும் பாராட்டி, அவர்களைக் கௌரவப்படுத்தும் விதமாக அந்தப் பட்டியலை வெளியிட்டு பாரத மாதாவே அவர்களைப் போற்றுவதாகக் குறிப்பிடுகின்றார்[27].

தலைவர்களுக்கு நெருக்கடியான நேரங்களிலும், சுதேசியகப்பல் கம்பெனி, கைத்தொழில் போன்ற சுதேசிய முயற்சிகளுக்கும் செலவிட திட்டமிடப்பட்டது. அதில் திரடடப்பட்ட நிதியை ஆங்கிலேயக் கம்பெனியான ஆர்பத்நாட் கம்பெனியில் முதலீடு செய்தனர். ஆனால் அக்கம்பெனி திவாலானது. இதனை தேசியப்பிரச்சினையாகக் கருதிய பாரதி 'இந்தியா' பத்திரிகையில் அது சம்மந்தமாக விசாரணை நடத்தவேண்டுமென வலியுறுத்தினார். இதனை மாற்ற சுதேசிய பணம் திவாலானதை எதிர்த்து பெண்கள் கேள்வி கேட்பது நியாயம் எனவும் இவ்வாறு நடந்தால் மக்கள் பணம் தரமாட்டார்கள். எனவே அதனைப்பற்றி விளக்கமும் குறிப்பும் தர வேண்டும் எனக்கூறுகிறார்[28]. 'சுதேசிய வங்கி' ஆரம்பிக்க வேண்டுமென இந்தியர்களை வலியுறுத்தி எழுதினார்[29].

நாம் நம் துன்பங்களிலிருந்து விடுபட சுதேசியமே வழி என்கின்றார்.[30] வெளிநாடு வாழ் தமிழர்களும் இம் முயற்சியில் பங்கு பெற கோரிக்கை வைத்து அதன் மூலம் சுதேசிய முயற்சியை வெற்றி பெறச் செய்தார். அதே நேரத்தில் சௌகார்கள் போன்ற பல செல்வந்தர்கள் சுதேசிய நிதிக்கு பணம் தராமல் இருந்ததினால் வசூல் தொகை ஓரளவே சேர்ந்தது. இல்லையெனில் ஏறக்குறைய ரூ. 5000 சேர்ந்திருக்கும் என கூறுகின்றார்.[31] சுதேசிய நிதி சேகரிப்பில் மக்கள் முழு ஒத்துழைப்பு அளித்தால் தான் செய்ய எண்ணியிருக்கும் காரியத்தை செய்ய முடியும் என்கிறார்.[32] பாரதியார் கைத்தொழிலுக்காக சேர்க்கப்படும் சுதேசியநிதி முறையான வழியில் செலவிடப்பட வேண்டும். அதை செலவிடுவதில் அனைத்து மாகாணத்தவரின் விருப்பம் மற்றும் வாக்கு இருக்க வேண்டும். அதை பிரித்து பிரித்து செலவிடாமல் மொத்தமாக சேமித்து வைத்தால்தான் பெரிய காரியத்தைச் செயல்படுத்த முடியும் என யோசனை கூறுகின்றார்.[33] நாம் சுதேசியத்தில் வெற்றியடைந்ததால் ஆங்கிலேயர் நம்மைக் கண்டு அஞ்சுவர் என்கின்றார். பஞ்சாபில் அந்நிய பொருள் விலக்கலில் பொது மக்கள் உறுதியுடனிருப்பதை சுட்டிக்காட்டி நம்மவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார்.

அனைத்து நிகழ்வுகளையும் போன்று தேசசேவையிலும் வங்காளம் நமக்கு முன்னோடியாக சுதேசியத்தை ஆதரித்து மீர்ஜீம்லா கான்பரன்ஸ் நடத்தியுள்ளது. அது அனைத்து முயற்சிகளிலும் சுதேசியத்தை வலியுறுத்திருப்பதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் திட்டமிருப்பதை சுட்டிக்காட்டுவதன் மூலம் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் நடக்க இருக்கும் கூட்டத்தை அந்த முறையில் நடத்த வேண்டும் என்கின்றார். வங்காளத்தில் இளைஞர்கள் பிறர் உதவியின்றி சுயதேவை பூர்த்தியில் ஈடுபட்ட இளைஞர்களை, பாராட்டி அங்கு ஏற்பட்டிருக்கும் சுதேச பக்தி தமிழ்நாட்டில் இல்லையென பாரதி வருந்துகின்றார்.[34] அரசின் அடக்குமுறையையும் மீறி வங்காள மாணவர்கள் வர்ஜனக் கொண்டாட்டத்தில் வெற்றி பெற்றது சுதேசியப்போராட்டத்தின் வெற்றி எனக் கூறுவதன் மூலம் தமிழ்நாட்டிலும் இத்தகைய போராட்டத்தை ஊக்குவிக்க வேண்டுமெனக் கூறுகிறார்.

**சென்னை ஜனசங்கம்**

சென்னை ஜனசங்கத்தின் வேலைத்திட்டங்களாக சுதேசியம், பஹிஷ்காரப் பிரச்சாரம், உடற்பயிற்சிக் கழகங்கள் நடத்துதல், நூலகம் நடத்துதல், சுதேசிய நிதி திரட்டல், சுதேசியப் பிரச்சாரத்திற்கு இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியவை இருந்தன. பாரதி 'சென்னை ஜனசங்கத்தில்' உறுப்பினராக இருந்து பணியாற்றியதை அவரின் கதை ஞானரதமும் உறுதிப்படுத்துகிறது.[35] சுதேசியத்தைப் பற்றி பாரதி ''சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று; இதுவே ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித்தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும்'' என அறிவுறுத்துகின்றார். தேசியம்

என்பது வெறும் அரசியல் செயல் திட்டமன்று. அது கடவுளிடமிருந்து வந்த ஒரு சமயம் என்பது தேசியத்தைப் பற்றி அரவிந்தரின் இலக்கணமாகும். பாரதியாரும் இதனை ஏற்றுக் கொண்டார். அதனால் தான் 30.3.1907 ''இந்தியா'' பத்திரிகையில் ''சுதேசியம்''பற்றி பாரதியார் ''சுதேசியம் வளர மக்கள் நமது நாட்டில் உற்பத்தியாகும் சாமான்காளை வாங்கவேண்டும். கூடியவரை மதச்சண்டைகளைப் பஞ்சாயத்துக்கள் மூலமாக தீர்த்துக்கொள்ள வேண்டும். கைத்தொழிற்கல்வியும் ஏற்படுத்தி நடத்த வேண்டும் என எழுதினார். பாரதியார் தன்னுடைய சுதேசியக் கொள்கைகளை சுதேசிவஸ்து பிரசாரிணி சபை மூலமாகவும், சுதேசித்தொழில் முயற்சிகளான சுதேசிக்கப்பல் கம்பெனி ஆதரவு போன்றவை பற்றி எழுதியும், அதற்கான நிதி திரட்டுதல் மூலமும் வெளிப்படுத்தினார்.

### குறிப்புகளும் மேற்கோள்களும்

1. தொ.மு. சிதம்பர ரகுநாதன், பாரதி காலமும், கருத்தும், (சென்னை : காலச் சுவடு பதிப்பகம், 2003), ப.24.
2. ஆங்கிலேய முதலாளிகள் இந்தப் பகுதிகளில் ஜின்னிங் பாக்டரிகளையும் நவீன நூல் நூற்கும் எந்திரங்களையும் வைத்திருந்ததன் மூலம் மக்களின் பொருளாதார நிலையைச் சீரழித்தனர். இதனால் இதை உணர்ந்து எழுச்சி கொள்வதை விட நேரடியாகக் கண்டு அனுபவித்து, சுதந்திர இயக்கத்தில் பங்கு கொள்ள வந்தால் அதன் தாக்கம் அதிகமாக இருக்கும். இது படித்த, மத்தியதர வர்க்கத்தினரும், வியாபாரப் பிரிவினரும் போராட்டத்தில் பங்கு பெற காரணமானது.
3. பெ.சு.மணி, பாரதியியல் ஆய்வுக்கட்டுரைகள், முதல்பாகம், (சென்னை: பூங்கொடி பதிப்பகம், 2001,), பக். 229-30,
4. ஜெகஜோதி, பாரதியின் தேசப்பற்று,தினமணி, 11.9.2009.
5. சீனி. விசுவநாதன், காலவரிசைப்படுத்தப்பட்டபாரதி படைப்புகள், தொகுதி - 6 , (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 2005), பக்.331-34.
6. விபின் சந்திரபாலரின் கடுங்காவல் தண்டனையை எதிர்த்து 'சுதேசி வஸ்து பிரசாரிணி சபை' சார்பில் 17-9-1907ஆம் ஆண்டு சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பாரதியும் அவரது நெருங்கிய தோழர் ஆர்யாவும் பேசியுள்ளனர். 28-9-1907 ஆம்ஆண்டு பாரதியார் தலைமை யில் ஒரு கண்டன ஊர்வலம் நடைபெற்றது. பெ.சு.மணி, முன்னர் சுட்டப் பட்டது, ப. 164.
7. சீனி. விசுவநாதன், தொகுதி - 6, முன்னர் சுட்டப்பட்டது, பக்.41-44.
8. சீனி. விசுவநாதன், காலவரிசைப்படுத்தப்பட்டபாரதி படைப்புகள், தொகுதி - 2 (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 2003), பக்.1-3.
9. மேலது,
10. சீனி. விசுவநாதன், காலவரிசைப் படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் , தொகுதி - 5 (மாடல் ஹவுஸ், லேன்,சென்னை, 2008), ப.82.
11. சீனி. விசுவநாதன், தொகுதி.2, முன்னர்சுட்டப்பட்டது, பக்.68-9.
12. சீனி. விசுவநாதன், தொகுதி.1, முன்னர் சுட்டப்பட்டது,.பக்.498-99.
13. சீனி. விசுவநாதன், தொகுதி.4, முன்னர் சுட்டப்பட்டது, பக்.245-46.
14. சீனி. விசுவநாதன், தொகுதி.6 முன்னர் சுட்டப்பட்டது, பக். 67-8.
15. கப்பல் நடத்தும் தொழிலோடு, கப்பல் நிர்மாணம் செய்யும் தொழிலையும் கற்பித்தல், கப்பல் தொடர்பான அனைத்து அம்சங்களையும் கற்றுத்தருகிற பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துதல், கப்பல் தொழிலிலும் இன்னபிற வியாபார முறைகளிலும் இந்தியா - இலங்கை

இடையே நல்லுறவை ஏற்படுத்தி ஒன்றுபட்டுழைக்கும் மனோபலத்தை வளர்த்தல், ஆகியவையே சுதேசிக்கப்பல் கம்பெனியின் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டன.

16. ‘இந்தியா’வில் பாரதி,சுதேசிக்கப்பல் கம்பெனிபற்றி எழுதினார். ‘வெகுகாலமாய் புத்திரப்பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏககாலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ, அத்தனை ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரத தேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே’என பத்திரிகையில் எழுதினார்.
17. அ.கி. வேங்கட சுப்பிரமணியன், துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம், தினமணி, 11.9.2006,
18. த. ஸ்டாலின் குணசேகரன், 5.9.2008, ப. 6, தினமணி, சரித்திரம் படைத்த சுதேசிக்கப்பல்.
19. 1884 ஆம் ஆண்டு வங்கத்தில் தொடங்கப்பட்ட உள்நாட்டு நதி வழி நீராவிக்கப்பல் போக்குவரத்து பணி முதல் முயற்சியாகும்.வெள்ளையர் இந்த முயற்சியை தோற்கடித்த பின்னர் 1905 ஆம் ஆண்டு சுதேசி இயக்கம் பரவியபோது ‘பெங்கால் ஸ்டீம் நேவிகேன் கம்பெனி உருவாயிற்று’ 1905ஆம் ஆண்டுமுதல் -1930ஆம் ஆண்டு வரை சுமார் 30 சுதேசிக்கப்பல் கம்பெனிகள் இந்தியாவில் தோன்றின. இவை அனைத்தும் சுதேசி முயற்சிகளாக இருப்பினும், வணிக நோக்கு, தனி மனித லாபம் முதலியவைஉள்ளடக்கியதாக அமைந்திருந்தன.
20. கலெக்டர் வின்ச் ஸ்ரீசிதம்பரம் பிள்ளைக்கு சொல்லுதல், கலெக்டர் வின்ச்க்கு ஸ்ரீசிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி என்னும் தலைப்புகளில்பாரதி புனைந்த பாடல்கள் ஆங்கிலேயருக்கு எதிரானதாக அவர்களுக்கு தோன்றியதால் 3 முறை அவை அந்தரங்க அறிக்கையில் சேர்ப்பதற்காக மொழிபெயர்க்கப்பட்டது. உரைநடை ஆங்கிலத்தில் கலெக்டர் விஞ்சுக்கும்,தேச பக்தர் சிதம்பரகாருக்கும் நடந்த விவாதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து மக்களுக்குக் கூறினார். (ம.பொ.சி. முன்னர் சுட்டப்பட்டது, பக். 84-85)
21. சீனி. விசுவநாதன், தொகுதி 1, முன்னர் சுட்டப்பட்டது, பக்.604-8.
22. சீனி. விசுவநாதன், தொகுதி.3, முன்னர் சுட்டப்பட்டது, பக்.257-61.
23. சீனி. விசுவநாதன், காலவரிசைப்படுத்தப்பட்டபாரதி படைப்புகள், தொகுதி - 2 (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 2003), பக்.1-3.
24. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், தொழில்.
25. சீனி. விசுவநாதன், தொகுதி.12 முன்னர் சுட்டப்பட்டது, பக்.235-38.
26. சீனி. விசுவநாதன், தொகுதி.3, முன்னர் சுட்டப்பட்டது, பக்.379-80.
27. சீனி. விசுவநாதன், தொகுதி.3, முன்னர் சுட்டப்பட்டது, பக்.257-261.
28. சீனி.விசுவநாதன், தொகுதி.1, முன்னர் சுட்டப்பட்டது , பக்.569-71
29. சீனி. விசுவநாதன், தொகுதி.4 முன்னர் சுட்டப்பட்டது, பக்.226-27.
30. சீனி. விசுவநாதன், தொகுதி.6 முன்னர் சுட்டப்பட்டது, பக்.143-48.
31. சீனி.விசுவநாதன், தொகுதி.1, முன்னர் சுட்டப்பட்டது, பக்.604-08.
32. சீனி. விசுவநாதன், தொகுதி.3, முன்னர் சுட்டப்பட்டது, பக்.379-80.
33. சீனி. விசுவநாதன், தொகுதி.4, முன்னர் சுட்டப்பட்டது பக்.762-63.
34. மேலது.
35. பெ.சு.மணி,பாரதியியல் ஆய்வுக் கட்டுரைகள்,முதல்பாகம், (சென்னை: பூங்கொபதிப்பகம், 2001), பக்:247-51.